VASTU FINSERVE

<u>மிக முக்கியமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (MITC)</u>

**கடன்தாரரர் /கள் பெயர்/கள்**

**கடன் கணக்கு எண் :** ______________________________

**<u>கடன் வகை : சொத்துக்கு எதிரான கடன்</u>**

மேலே குறிப்பிடப்பட்ட கடன் வாங்குபவர்களுக்கும் வாஸ்து ஃபின்சர்வ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட உங்கள் கடனின் முக்கிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

## 1. கடன் கணக்கின் முக்கிய விதிமுறைகள்

| | |
|---|---|
| வழங்க ஒப்புதலளிக்கப்பட்ட கடன் தொகை : | ரூ . |
| வட்டி விகித வகை: நிலை வட்டி /மாறுபடும் அல்லது இரண்டும் இணைந்த /சிறப்பு வட்டி விகிதம் | மாறுபடும் வட்டி விகிதம்/ நிலை வட்டி |
| கடனுக்கான நோக்கம் : | |
| VFIPL PLR(அடிப்படை வட்டி விகிதம்): | 21.07% |
| வட்டி விகிதம்: | ஆண்டுக்கு --% (VFIPL அடிப்படை வட்டி விகிதம் 21.07% +/- பரவல்%) |
| கடன் காலம் : | ----------------- மாதங்கள் |
| EMI தொகை: | ரூ. |
| EMIs எண்ணிக்கை : | |
| தவணை வகை : | மாதாந்திரம் |
| EMIs/PEMI செயலாக்க நாள் : | ஒவ்வொரு மாதமும் 5/10 ஆம் தேதி |
| திருப்பிச் செலுத்தும் முறை : | NACH |
| வட்டி விகிதத்தில் மாற்றம் குறித்த தகவல் அளிப்பதற்கான வழிமுறை : | மின்னஞ்சல்/குறுஞ்செய்தி/கடிதம் / வாட்ஸ் அப் |
| வட்டி விகிதத்தை மாற்றியமைப்பதற்கான தேதி : | PLR மாற்றத்தைப்பொறுத்து |
| தவணை நீட்டிப்பு அல்லது மானியம் : | தகுதியின் அடிப்படையில் அதற்குட்பட்டு |

- VFIPL இடமிருந்து எந்த ஒரு நினைவூட்டல்களோ அல்லது அறிவுறுத்தல்களோ இல்லாத வகையில் கடன்தாரர்/கள் EMIs மற்றும் ப்ரீ EMI வட்டி (பொருந்துமானால்) தொகைகளை அவன் /அவள் /அவர்கள் தானாகவே முன்வந்து முறையாக செலுத்தவேண்டும்.
- அடிப்படை வட்டி விகிதத்தில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றங்கள் குறித்த தகவல்களும் VFIPL கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறிவிக்கப்படும். மேலும், கடிதம்/ மின்னஞ்சல் / குறுஞ்செய்தி மூலம் தனிநபர்களுக்கு தகவல் அனுப்பப்படுவதோடு கூடுதலாக அடிப்படை வட்டி விகிதத்தில் மேற்கொள்ளப்படும் அத்தகைய மாற்றங்கள் குறித்த தகவலை நிறுவனத்தீன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு முறையாக அறிவித்து உடனடியாக VFIPL வலைத்தளத்தில் வெளியிடப்படும்.கடன்தாரர்/கள் தேர்ந்தெடுக்க பின்வரும் விருப்பத்தேர்வுகள் வழங்கப்படும் 1) EMI தொகையை அதிகரித்தல் 2) கடன் காலத்தை நீட்டித்தல் 3) EMI தொகை அதிகரிப்பு மற்றும் கடன் காலம் நீட்டிப்பு இரண்டும் இணைந்த முறை 4) கடன் தொகையை பகுதியாக அல்லது முழுவதுமாக முன் கூட்டியே செலுத்துதல் 5) கடன் கணக்கை நிலை வட்டி முறைக்கு மாற்றியமைத்தல். இந்த விருப்பத்தேர்வுகள் 7 நாட்களுக்குள் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கான கோரிக்கை பெறப்படவில்லை என்றால் இதில் குறிப்பிட்ட EMI தொகை நிலையாக இருக்கும் மற்றும் கடன் கால அளவு சரிசெய்து கொள்ளப்படும். இருப்பினும் EMI தொகையை மாற்றியமைக்கும் உரிமையை VFIPL தக்கவைத்துக் கொண்டுள்ளது. அத்தகைய மாற்றம் கடன் தீர்வில் எதிர்மறை விளைவை ஏற்படுத்தாததை VFIPL உறுதி செய்யும். VFIPL அவ்வப்போது வழங்கப்படும் பொருந்தக் கூடிய சட்டபூர்வமான வழிகாட்டுதல்களை பின்பற்றி செயல்படும்

## 2. சந்தாக்கள் மற்றும் கட்டணங்கள்

| வ. எண் | கடன்/சேவை வகை | சந்தா வகை / விதிக்கப்படும் கட்டணம் | எப்போது செலுத்த வேண்டும் | கால இடைவெளி | தொகை , ரூபாயில் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்துக்கு எதிரான கடன்களுக்கு திரும்ப வழங்கப்படாத தொடக்க நிலை விண்ணப்ப கட்டணம் | லாக் இன் சந்தா கட்டணம் | விண்ணப்பிக்கும் போது | ஒரே முறை | ரூ 3000/- வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 2 | செயலாக்கக் கட்டணம் | செயலாக்கக் கட்டணம் | விண்ணப்பிக்கும் போது | ஒரே முறை | வழங்க ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மீது 3% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 3 | வரவேற்புக் கடிதம் மற்றும் கடன் தீர்வு அட்டவணை நகல் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கையின் போதும். | ரூ 250/- வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 4 | கடன் ரத்து கட்டணங்கள் | கடன் ரத்து கட்டணங்கள் | நிகழ்வின் போது | ஒரே முறை | வழங்க ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மீது 4% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 5 | கடன் ஒப்பந்த மீறல்களுக்கான தண்டக் கட்டணங்கள் | கூடுதல் கட்டணங்கள் | கடன் வழங்குனர் நிகழ்வை கண்டறியும் போது | மாதந்தோறும் | தவணை தவறிய நிலுவைத் தொகையின் ஒவ்வொரு 1000 ரூபாய்க்கும் நாள் ஒன்றுக்கு ரூ 1.25 |
| 6 | சட்டபூர்வமான கட்டணங்கள் | முத்திரைக் கட்டணம் | தொகை வழங்கல் நிர்ணயிக்கப்படும் போது/ | பொருந்தத்தக்க வகையில் | சம்பந்தப்பட்ட அந்தந்த மாநிலங்களுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | MOD/MOE பதிவுக் கட்டணம் | கூடுதல் பிணை மாற்றியமைக்கப்படும் போது | | பொருந்தும் வகையில் |
| 7 | ஒழுங்குமுறை அமைப்புக்களால் விதிக்கப்படும் சந்தாக்கள்/கட்டணங்கள் | CERSAI போன்ற அமைப்புக்களால் விதிக்கப்படும் சந்தாக்கள்/கட்டணங்கள் | தொகை வழங்கல் நிர்ணயிக்கப்படும் போது/ கூடுதல் பிணை மாற்றியமைக்கப்படும் போது | பொருந்தத்தக்க வகையில் | ஒழுங்குமுறை அமைப்புக்களால் விதிக்கப்படும் உள்ளபடியான சந்தாக்கள்/ கட்டணங்கள்+ பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 8 | வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக எந்த ஒரு மூன்றாம் தரப்பினர்(களுக்கும்) செலுத்தப்படவேண்டிய சந்தாக்கள் /கட்டணங்கள் | அடமான உத்திரவாத நிறுவனங்கள் போன்ற சேவை வழங்கும் மூன்றாம் தரப்பினர்களால் விதிக்கப்படும் சந்தாக்கள் /கட்டணங்கள் | தொகை வழங்கப்படும் போது | பொருந்தத்தக்க வகையில் | மூன்றாம் தரப்பினர் (களால்) விதிக்கப்படும் உள்ளபடியான சந்தாக்கள்/ கட்டணங்கள்+ பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 9 | நிர்வாகக் கட்டணம் | | தொகை வழங்கப்படும் போது | ஒரே முறை | ரூ 5,500/- வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 10 | கடன் வழங்களுக்குப் பிறகான ஆவணம் (PDD கட்டணங்கள்) | | தொகை வழங்கப்படும் போது | ஒரே முறை | வழங்க ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மீது 50% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மான தீர்வைகள். |
| 11 | இருப்பு தொகை மாற்றியமைக்க திரும்ப வழங்கப்படாத முன் செலுத்து கட்டணத் தொகை | | தொகை வழங்கப்படும் போது | BT வகைகளுக் கு ஒரே முறை | ரூ 5000/- வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| 12 | விலைகளை ஈடு செய்வதற்கான செலவுகள் | இடை நிலை செலவுக ள் | செலவுகள் ஏற்படும் போது | | ஒரு கடன் கணக்குக்கு பொருத்த மான உள்ளபடி யான விலைகள், கட்டணன ங்கள் செலவுகள் மற்றும் இதர பணங்கள் ள் ஆகியவற் றை ஈடு செய்வதற் காக இடைநி லை கட்டணங்க ள் மற்றும் செலவுதி தொகைக ள் விதிக்கப்ப டுகின்றன. |
| 13 | காசோலை/NACH/ SI மறுக்கப்பட்டதற் கான கட்டணம் | பல்வகை வரவுகள் | காசோலை/NACH/ SI மறுக்கப்படும் நிகழ்வுகளில் | எத்தனை முறை மறுக்கப்பட்ட து என்பதைப் பொறுத்து இருக்கும் | மறுக்கப்ப டும் ஒவ்வொரு நிகழ்வுக்கு ம் 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| 14 | நிலுவைத் தொகையை | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | ஒவ்வொரு வருகைக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசூலிப்பதற்காக வாடிக்கையாளரின் இருப்பிடத்திற்கு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வருகைகளுக்கும் | | | | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 15 | காசோலை தொகை வசூலிப்பதற்கான கட்டணம் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | ரூ 250 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 16 | ரொக்கத் தொகை வசூலிப்பதற்கான கட்டணம் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 17 | முன் தேதியிட்ட காசோலை /NACH மாற்றியமைப்பதற்கான கட்டணம் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 18 | தவணைத் தேதி சேவை மாற்றத்திற்கான கட்டணம் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 19 | ஆவணங்களின் பட்டியல் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 20 | முன் முடிப்பு கடிதம் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| 21 | நிலுவைத் தொகை இல்லை | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக்கும் | ரூ 500 வரை + |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சான்றிதழ் படி நகல் | | | | பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| 22 | ஆவணங்களின் நகல் மீட்டெடுப்பு | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக் கும் | ரூ 1000 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| 23 | சட்டம் / தொழில்நுட்ப சரிபார்ப்புக்கள் போன்ற - வெளி நிபுணர் ஆலோசனை தொடர்பான கட்டணங்கள் | பல்வகை வரவுகள் | செலவுகள் ஏற்படும் போது | ஒவ்வொரு நிகழ்வுக்கும் | உள்ளபடி யான தொகை |
| 24 | தொகை முன் செலுத்தல் மற்றும் முன் முடிப்புக் கட்டணங்கள் | தொகை முன் செலுத்த ல் மற்றும் முன் முடிப்புக் கட்டண ங்கள் | நிகழ்வின் போது | பொருந்தும் வகையில் | தொழில் நோக்கங்க ளுக்காக தனிநபர்/ தனிநபர் அல்லாதவர் களுக்கு மாறுபடும் வட்டி /நிலையா ன வட்டி விகிதத்தில் வழங்கப்ப் டும் சொத்துக்கு எதிரான கடன் திட்டங்களு க்கு @ 4% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் + |
| 25 | கடன் காலத்தை EMIக்கு அல்லது EMI ஐ கடன் காலத்திற்கு மாற்றியமைப்ப தற்கான பகுதி முன்தொகை செலுத்தல் | மாற்றிய மைப்பத ற்கான கட்டண ம் | நிகழ்வின் போது | பகுதித் தொகை செலுத்தப்ப டும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் | ரூ 5000 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் + |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (பகுதி முன்தொகை செலுத்துவதற்கான கோரிக்கை 30 நாட்களுக்குள் பெறப்படவேண்டும் ) | | | | |
| **26** | மாறுபடும் வட்டி விகிதத்தின் கீழான கடன் கணக்கை குறைந்த வட்டிவிகித முறைக்கு மாற்றியமைக்க | மாற்றியமைப்பதற்கான கட்டணம் | நிகழ்வின் போது | ஒவ்வொரு மாற்றத்துக்கும் | ரூ 5000 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் அல்லது மாற்றியமைக்கும் சந்தர்ப்பத்தில் நிலுவையிலிருக்கும் அசல் தொகை மற்றும் வழங்கப்படாத தொகை (ஏதாவது இருந்தால்) அதன் மீது 2% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள்<br><br>இதில் எது அதிகமோ அந்தத் தொகை |
| **27** | நிலை வட்டி விகிதத்திலிருந்து மாறுபடும் வட்டி விகிதத்திற்கு மாற்றியமைக்க அல்லது எதிர்மாறாக மாற்றியமைக்க | மாற்றியமைப்பதற்கான கட்டணம் | நிகழ்வின் போது | ஒரே முறை | கடன் நிலுவைத் தொகை மீது 3% வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வமான தீர்வைகள் |
| **28** | தாள் வடிவ கணக்கு அறிக்கை நகல் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒவ்வொரு கோரிக்கைக்கும் | ரூ 500 வரை + பொருந்தும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| **29** | அசல் ஆவணங்கள் மீட்டெடுப்பு / சேமிப்பக கட்டணங்கள் | பல்வகை வரவுகள் | நிகழ்வின் போது | ஒரே முறை | ரூ 3000 வரை + பொருந்தும் வரிகள் / சட்டபூர்வ மான தீர்வைகள் |
| | | | | | |

**குறிப்பு :**

- VFIPL இன் சொந்த விருப்பத்தின் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சந்தா மற்றும் கட்டணங்கள் மாற்றங்களுக்கு உட்பட்டது மற்றும் அத்தகைய எந்த ஒரு மாற்றம் குறித்த தகவலும் எழுத்து / மின்னஞ்சல்/ குறுஞ்செய்தி மூலமாக வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும். இருப்பினும் வட்டி விகிதம் மற்றும் கட்டணங்களில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றமும் எதிர்காலத்தில் செயலாக்கத் தக்கதாக இருக்கும்

## 3. கடனுக்கான பிணை :

அடமானச் சொத்து விவரங்கள் :
உத்திரவாததாரர்/கள் பெயர்/கள் :
இதர பிணைகள் (ஏதாவது இருந்தால்)

எந்த ஒரு உரிமை கோரல் தொடர்பாகவும் கடன்தாரருக்கு எதிராக நிறுவனத்திற்குள்ள எந்த ஒரு சட்டபூர்வமான உரிமை அல்லது பற்றுறுதிக்கு உட்பட்டு திருப்பிச் செலுத்தப்படவேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளும் செலுத்தப்பட்டு கடன் கணக்கு முடிக்கப்பட்டவுடன் அல்லது கடன் நிலுவைத் தொகைகள் முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டவுடன், VFIPL அனைத்து பிணைகளையும் விடுவித்துவிடும். இது தொடர்பான பொருந்தக் கூடிய அனைத்து சட்ட பூர்வமான வழிகாட்டுதல்களையும் VFIPL பின்பற்றி செயல்படும்

## 4. சொத்து /கடன்தாரர்கள் காப்பீடு :

கடன்தாரர்/கள் தீ விபத்து , நில நடுக்கம் மற்றும் வெள்ளம்

போன்ற இடர்பாடுகள் உட்பட அனைத்து ஆபத்துக்களுக்கும் எதிராக சொத்துக்களுக்கான காப்பீடு பெறவேண்டும் மற்றும் அத்தகைய காப்பீட்டின் கீழ் தனிப்பட்ட பயனாளியாக VFIPL ஐ அறிவிக்க வேண்டும். அதற்கான பிரீமியத் தொகைகளை கடன்தாரர்/கள் முறையாக உரிய காலத்தில் செலுத்தி பாலிசியை இந்தக் கடன் காலம் முழுவதும் செயல்பாட்டில் வைத்திருக்க வேண்டும் மற்றும் அவ்வப்போது அதற்கான ஆதாரங்களை அவன் /அவள் /அவர்கள் தானே முன்வந்து VFIPL இடம் சமர்ப்பிக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட காப்பீட்டை பெற கடன்தாரர் தவறுவாரேயானால் அந்த சொத்தை பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு சொத்துக்கு எதிரான காப்பீட்டு வசதியைப் பெறுவதற்கான விருப்பத்தேர்வை பயன்படுத்த மற்றும் அதற்கான செலவுகளை கடன்தாரரிடமிருந்து மீட்டெடுக்கும் உரிமையும் VFIPL கொண்டுள்ளது

கடன்தாரருக்கான காப்பீடு : கடன்தாரர் மருத்துவக் காப்பீடு / ஆயுள் காப்பீடு போன்ற காப்பீட்டுத் திட்டங்களை சுயமாக பெற்றுக்கொள்ளலாம் அத்தகைய காப்பீட்டு திட்டம்/திட்டங்களில் VFIPL ஐ தனிப்பட்ட பயனாளியாக அறிவிக்கவேண்டும்.

## 5. கடன் தொகை வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள்

a) கடன்தாரர்/கள் ஒப்புதல் கடிதத்தில் கண்டுள்ள தேவையான நிபந்தனைகளுக்கு இணங்க செயல்பட வேண்டும்; சுய பங்களிப்புத் தொகையை VFIPL க்கு திருப்திகரமான வகையில் செலுத்தி உறுதி செய்யவேண்டும் ; சொத்து மற்றும் உரிமை உடைமை ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்; ஒப்புதல்வழங்கப்பட்ட அமைவிட கட்டுமான வரைபடங்களை சமர்ப்பிக்கவேண்டும் VFIPL தேவைக்கு இணங்க அதன் சார்பாக சட்டபூர்வமான அனுமதிகளை பெற்று பிணை உருவாக்க வேண்டும்.

b) ஒப்புதல் கடிதம்/ கடன் ஒப்பந்தம்/ VFIPL இன் KYC பாலிசி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்பிக்க வேண்டும்.

c) கடன்தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்கள் /ஆவணங்களில் எந்த ஒரு மாற்றமும் இருந்தால் அதுகுறித்து VFIPL க்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

d) பெற்ற கடனுக்கு எதிராக வழங்கப்பட்ட சொத்தின் மீது கடன்தாரருக்கு தெளிவான , முழுமையான சந்தைப்படுத்துவதற்கான உரிமை இருப்பதை அவர் உறுதி செய்யவேண்டும் மற்றும் அதிலுள்ள எந்த ஒரு குறைபாடு குறித்த தகவலையும் எழுத்துமூலமாக VFIPL க்கு கடன்தாரர் தெரிவிக்கவேண்டும். மற்றும் அந்த பிணைச்சொத்தின் மீது எந்த ஒரு வில்லங்கமும் இல்லை மற்றும் அது தொடர்பாக

எந்த ஒரு வகையான கடப்பாடுகளும் இல்லை என்பதை உறுதி செய்யவேண்டும்.

e) ஒப்புதல் கடிதம்/கடன் ஒப்பந்தம் / பிணை ஆவணங்கள் / கடன் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட வேறு எந்த ஒரு இதர ஆவணங்களிலும் வகுத்துரைக்கப்பட்ட அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க செயல்படுவதை கடன்தாரர் உறுதி செய்யவேண்டும்.

f) கட்டுமான நடவடிக்கைகளின் முன்னேற்றம்/தாமதம் குறித்த தகவல்கள் உட்பட சொத்துக்கு விளைந்த எந்த ஒரு பெரிய சேதாரம், சொத்து தொடர்பாக அவ்வப்போது பொருந்தக் கூடிய வரி மற்றும் சட்டபூர்வமான தீர்வைகள் மற்றும் கட்டணங்களை செலுத்தாத நிலை, போன்ற விவரங்களை முறையாக தொடர்ந்து VFIPL க்கு தெரிவிக்கவேண்டும்.

g) ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அனுமதிக்கு இணங்க கட்டுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யவேண்டும். மற்றும் கட்டுமான மேம்பாட்டாளர் (மறு விற்பனை மூலம் பெறப்படும் சொத்துக்கள் என்றால் அதன் விற்னையாளர்) திட்டத்திற்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் திருப்திகரமாக பெற்றிருப்பதை கடன்தாரர் அவன் /அவள் உறுதி செய்ய வேண்டும்.

h) சுய பங்களிப்புகள், EMI செலுத்தல்கள் மற்றும் எந்தவொரு முன்தொகை செலுத்தல்களும் கடன்தரரின் தனிப்பட்ட சுய சுய மூலாதாரங்களில் இருந்து செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை திருப்திகரமாக உறுதி செய்வதற்கு அவசியம் என்று கருதும் அத்தகைய ஆவணங்கள் மற்றும் விவரங்களைக் கோர VFIPL-க்கு உரிமை உண்டு.

i) VFIPL அவசியம் என்று கருதும் அத்தகைய வழிமுறை மற்றும் வடிவத்தில் இறுதிப் பயன்பாட்டு சான்றிதழ் வழங்கப்படவேண்டும்

j) கடன் காலம், சீரான கால இடைவெளி, தொகை, கடன் தொகை திருப்பிச் செலுத்துவதற்கான வழிமுறை உட்பட கடன் தொகை திருப்பிச்செலுத்தும் நடமுறைகள் தொடர்பான அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இதன் கடன்தாரர் புரிந்து கொண்டுள்ளார். மற்றும் அதன் படி இதன் கடன்தாரர் VFIPL வகுத்துரைத்த படிவத்தில் கடன் வழங்க கோரியிருக்கிறார்.

## 6. கடன் நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்கான சுருக்கமான நடைமுறைகள்

தவணை தவறிய கடன் நிலுவைத் தொகைகள் அல்லது திருப்பிச் செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள முழு கடன் தொகை மற்றும் கட்டணங்கள் போன்ற அத்தகைய பொருந்தக் கூடிய எந்த ஒரு நிலுவைத் தொகையையும் மீட்டெடுக்கும் பொருட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் உட்பட எந்த ஒரு சட்ட நடைமுறைகளையும்

மேற்கொள்வதற்கு முன்பாக VFIPL எழுத்துமூலமான அறிவிப்பு அல்லது அறிவிப்புக்களை கடன்தாரர்/களுக்கு வழங்கும். இருப்பினும் VFIPL க்கு எந்த ஒரு கடப்பாடும் இல்லை என்ற நிலையிலும் அத்தகைய எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளும் முன்பாக , அதன் சொந்த விருப்பத்தின் கீழ் தனிப்பட்ட முறையில் கடன்தாரர் /களுக்கு நேரடியாக அல்லது தொலைபேசி மூலமாக அல்லது எழுத்து மூலமான நினைவூட்டல்கள் அல்லது அறிவுறுத்தல்களை அளிக்கும் (அதற்கான செலவுத் தொகையை ஏற்றுக் கொள்வதற்கு இதன் கடன்தரரே முழுப்பொறுப்பாவார்) இருப்பினும் இந்த கடனுக்கு எதிராக திருப்பிச் செலுத்தப்படவேண்டிய தொகைகள் தொடர்பாக கடன்தாரர் அவன் /அவளுக்குள்ள கடப்பாடுகள் குறித்து VFIPL எந்த ஒரு நினைவூட்டல் அல்லது அறிவுறுத்தல்களை வழங்காது , இந்தக் கடனுக்கு எதிராக செலுத்தப்படவேண்டிய அத்தகைய தொகைகள் குறித்த நேரத்தில் செலுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டியது கடன்தாரரின் முழுப் பொறுப்பாகும்.

VFIPL க்கு திருப்பிச் செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகைகளை மீட்டெடுப்பது தொடர்பாக VFIPL அவசியம் என்று கருதும் சந்தர்ப்பங்களில் அவ்வப்போது நடைமுறையிலுள்ள பொருத்தமான சட்டங்களின் கீழ் தனக்குள்ள அத்தகைய உரிமைகளை செயல்படுத்தும்.

7. **கிரடிட் ரெஃபரன்ஸ் ஏஜென்சிகளுக்கு தகவல் அளித்தல்**

கடன்தாரரின் கடன் தொடர்பான தகவல்களை உரிமம் பெற்ற கிரடிட் இன்ஃபர்மேஷன் பீரோக்களுக்கு VFIPL சமர்ப்பிக்கும்..

8. **மற்றவை**

எந்த ஒரு நபரும் ஒரு கடனுக்கான உத்திரவாததாரராக கருதப்படும் நிலையில் இந்திய ஒப்பந்தங்கள் சட்டம் 1872 மற்றும் கடன்தாரர் பெறும் கடன் சம்பந்தமாக உத்திரவாததாரர் நிறைவேற்றும் ஆவணங்களின் படி அவருக்கு இருக்கக் கூடிய கடப்பாடுகள் குறித்து அந்த நபருக்கு தகவல் வழங்கப்படும்

9. **திருப்பிச் செலுத்தவேண்டிய வருடாந்திர நிலுவைத் தொகை அறிக்கை வழங்கப்படும் நாள்-**

வாஸ்து கனெக்ட் ஆப் மூலமாகவும் மற்றும் கூடுதலாக ஒரு பொருத்தமான எலக்ட்ரானிக் வழி முறை மூலமாகவும் கடன் அறிக்கையை ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் அணுகும் வசதியை கடன்தாரர்களுக்கு VFIPL வழங்கும்

கடன் அறிக்கையின் தாள் வடிவ நகலை வாடிக்கையாளர் கோரலாம் இதில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான காட்டணங்களுக்கு உட்பட்டு அத்தகைய தாள் வடிவ அறிக்கைகள் வழங்கப்படும்.

## 10. வாடிக்கையாளர் சேவைகள்

வாடிக்கையாளர் வங்கி வேலை நேரத்தின் இடையில் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை (தேசீய விடுமுறை நாட்கள் தவிர்த்து) எங்கள் கிளை அலுவலகத்துக்கு வருகை தரலாம்,
வாடிக்கையாளர் சேவை குறித்து தொடர்பு கொள்ளவேண்டிய நபர் : VFIPL கிளை மேலாளர் அல்லது விற்பனை மேலாளர் பொருந்தும் வகையில் இவர்களில் ஒருவர்

அல்லது
மேலும் பின்னூட்டம் அளிக்க அல்லது புகார் அளிக்க விரும்பும் வாடிக்கையாளர்கள் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை (தேசீய விடுமுறை நாட்கள் தவிர்த்து) காலை 10:00 மணி முதல் மாலை6:00 மணி வரை பின்வரும் வழிமுறைகளை பயன்படுத்தி தொடர்பு கொள்ளலாம்

**இலவச அழைப்பு எண்** : 1800 26 77770

**மின்னஞ்சல்** : customercare@vastufinserve.com

கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எங்களுக்கு எழுதுங்கள் :

வாஸ்து ஃபின்சர்வ் இந்தியா பிரைவேட் லிமிடெட் - வாடிக்கையாளர் சேவை பிரிவு
A விங் 203/204 நவ் பாரத் எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிட்டட் L, நவ் பாரத் எஸ்டேட்ஸ், பாரிஸ்டர் நாத் பாய் மார்க் , மும்பை,
மகாராஷ்டிரா 400015

குறிப்பிட்ட ஆவணங்களை பெறுவதற்கான நடைமுறைகள் :-

கடன் கணக்கு

a) கிளைக் குழு /வாடிக்கையாளர் சேவைக்குழுவில் கோரிக்கை பெறப்பட்ட தினத்திலிருந்து 7 வேலை நாட்களுக்குள் கடன் கணக்கு அறிக்கை, வழங்கப்படும். ( MiTC இன் படி தேவையான நிர்வாகக் கட்டணங்கள் பொருந்தும்)
b) கோரிக்கை பெறப்பட்ட தினத்திலிருந்து 10 வேலை நாட்களுக்குள் ஆவணங்களின் புகைப்பட நகல் பிரதிகள் வழங்கப்படும் ( MiTC இன் படி தேவையான நிர்வாகக் கட்டணங்கள் பொருந்தும்
c) கடன் கணக்கு முடித்துவைக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அசல் ஆவணங்கள் திருப்பி வழங்கப்பட்டுவிடும்

## 11. குறை தீர் நடைமுறைகள் :

நிலை 1

நீங்கள் திங்கள் முதல் வெள்ளி வரை (தேசிய விடுமுறை நாட்கள் தவிர்த்து ) 1800 26 77770 என்ற எண்ணில் காலை 10:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை எங்களை அழைக்கலாம் அல்லது customercare@vastufinserve.com என்ற வலைத்தள முகவரிக்கு எழுதலாம்,

திங்கள் முதல் வெள்ளி வரை நேரம்: காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை எங்கள் கிளைக்கு நேரடியாக வருகை தரலாம்.

customercare@vastufinserve.com என்ற வலைத்தள முகவரிக்கு எங்களுக்கு எழுதுங்கள்

உங்களிடமிருந்து தகவலைப் பெறும் வாடிக்கையாளர் சேவை குழுவிடமிருந்து 7 வேலை நாட்களுக்குள் ஏற்பிசைவை/ எதிர்வினையை நீங்கள் பெறுவீர்கள் .

நிலை 2

உங்களுக்கு வழங்கப்பட்ட தீர்வு குறித்து உங்களுக்கு திருப்தியில்லை என்றால் , நிறுவனத்தின் குறைதீர் அதிகாரிகள் மற்றும் /அல்லது நோடால் அதிகாரியை தொடர்பு கொள்ளுமாறு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

குறை தீர் அதிகாரி மற்றும் தலைமை நோடால் அதிகாரிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | **குறைதீர் அதிகாரி** | **தலைமை நோடால் அதிகாரி** | **நோடால் அதிகாரி** |
|---|---|---|---|
| **பெயர்** | ரஷ்மி அம்பேகர் | ஹேமாத்ரி பெய்யேட்டி | நிகில் கார்வால்ஹோ |
| **எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்** | grievanceofficer@vastufinserve.com | nodalofficers@vastufinserve.com | |
| **எங்களை அழையுங்கள்** | 022-35286713 | | |
| **இந்த முகவரிக்கு எங்களுக்கு எழுதுங்கள்** | வாஸ்து ஃபின்சர்வ் இந்தியா பிரைவேட் லிமிட்டட் யூனிட் எண். 203 & 204, 2வது தளம், Aவிங் , நவ்பாரத் எஸ்டேட்ஸ், ஜகாரியா பந்தர் சாலை, சீவ்ரி, மும்பை | | |

| | 400015 |
|---|---|

உங்கள் புகார் / கோரிக்கை பெறப்பட்ட தினத்திலிருந்து 7-10 வேலை நாட்களுக்குள் ஏற்பிசைவு / எதிர்வினை உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

நிலை 3

உங்கள் புகார் /தாவாவுக்கான தீர்வு ஒரு மாத காலத்திற்குள் காணப்படாவிட்டால் , வாடிக்கையாளர் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் ஒழுங்குமுறை ஆணையத்திடம் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் மேல்முறையீடு செய்யலாம் :

பொறுப்பு அதிகாரி

ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா , DNBS,

மும்பை பிராந்திய அலுவலகம், RBI கட்டிடம்,

3வது தளம், மும்பை மத்திய ரயில் நிலையம் எதிரில்,

மும்பை-400008

அல்லது

ஆன்லைன் மூலமாக https://cms.rbi.org.in என்ற வலைத்தளத்தில் புகார் பதிவு செய்யலாம்

**அல்லது**
**எலக்ட்ரானிக் அல்லது தாள் நடை முறைகளின் மூலமாக சென்ட்ரலைஸ்ட் ரிஸீப்ட் அண்ட் பிராசசிங் சென்டருக்கு(CRPC) பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கலாம்**

| | |
|---|---|
| **மின்னஞ்சல்** | **CRPC@rbi.org.in** |
| **முகவரி** | **CRPC, 4 ஆவது தளம் செக்டார் -17, சண்டிகர் – 160017** |
| **தொடர்பு மையம் (கட்டணமில்லா இலவச எண்)** | **14448** |
| **நேரம்** | **காலை 9:30 மணியிலிருந்து** |

| | |
|---|---|
| | **மாலை to 5:15 மணி வரை** |

இதன் மூலம் ஒப்புக்கொள்ளப்படுவது என்னவென்றால் இதன் தரப்பினர்கள் இந்தக் கடன் தொடர்பான ஒரு விரிவான மற்றும் முழுமையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை பெற இதன் ஒப்புதல் கடிதம் மற்றும் அத்துடன் சேர்த்து கடன் ஒப்பந்தம் மற்றும் அவர்களால் அல்லது அவர்களில் ஒருவரால் நிறைவேற்றப்பட்ட /நிறைவேற்றப்படவிருக்கும் இதர ஆவணங்களை பார்வையிடுவார்கள் மற்றும் அதன் மீது சார்ந்திருப்பார்கள் மற்றும் எந்த ஒரு முரண்பாடும் காணப்பட்டால் இதில் குறிப்பிட்ட கடிதம் மற்றும் ஆவணங்களே மேலோங்கி நிலைக்கும். மேலே குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இதன் கடன்தரர் /கள் வாசித்தார்கள் அல்லது VFIPL ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி அதை கடன்தாரர்/களுக்கு வாசித்துக் காட்டினார் மற்றும் அதன் உள்ளடக்கங்களை இதன் கடன்தாரர்/கள் புரிந்து கொண்டார்கள் மற்றும் இந்த MITC இன் ஒரு படி நகலை இதன் கடன்தாரர் பெற்றுக்கொண்டார்

| விண்ணப்பதாரர் /கூட்டு விண்ணப்பதாரர் பெயர் | தேதி | கையொப்பம் |
|---|---|---|
| | | |
| | | |

____________________________

கையெழுத்திட் **VFIPL** ஆல் அதிகாரம் வழங்கப்பட்டவர்